20.08.2024

அசல் வழக்கு எண்: 158/2015

வா.சா.1 சாட்சி அழகர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்வதற்காக அனுமதிகோரி மனு தாக்கல் செய்து வா.சா.ஆ.6 முதல் 8 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கிற்கு எவ்வாறு தொடர்புடையது என்று சொல்லிக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கிற்கு என்ன வகையில் தொடர்புடையது என்றால் தாவா சொத்தில் வீடு இல்லை என்று தாசில்தார் இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார். ஆனால் தாவா இடத்தில் தனலெட்சுமி என்பவர் தாவா இடத்தில் வீடு கட்டி குடியிருக்கிறார் என்பதை காட்டுவதற்காக மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி தனலெட்சுமி என்பவருக்கு எதிராகத்தான் அசல் வழக்கு எண்.99/2014 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கு முடிவடைந்துவிட்டதா என்றால் முடிவடையவில்லை. எனது வழக்குப்படி தனலெட்சுமி என்பவருக்கு தாவா இடத்தில் வீடு கட்டுவதற்கு உரிமையுள்ளது என்று கூறுகிறேனா என்றால் அவருக்கு உரிமையில்லை. தனலெட்சுமி என்பவர் ஆக்கிரமிப்பு செய்து குடியிருக்கிறார் என்றும் அவரை காலி செய்யவேண்டும் என்றுதான் மேற்படி அசல் வழக்கு எண்.99/2014 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில்

தனலெட்சுமி எதிர்வாதம் செய்கிறார்களா என்றால் செய்கிறார்கள். அவர் என்ன எதிர்வாதம் செய்கிறார் என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.8 ஆவணம் என்ன சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட ஆவணம் என்பது மேற்படி ஆவணத்தின் தெரியவராது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்தில் வா.சா.ஆ.8 ஆவணத்தில் கண்ட கதவு எண் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 முதல் 8 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றாலும் தனலெட்சுமி என்பவர் தாவா சொத்தில் வீடு எதுவும் போடவில்லை என்றாலும் சரியல்ல. அவ்வாறு தனலெட்சுமி என்பவர் வீடு கட்டியிருந்தால் தாவா சொத்தில் உரிமையாளர்களான பிரதிவாதிகள் அவர் மீது நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.7 ஆவணத்தில் கண்ட வழக்கானது பிரதிவாதிகளும், அவர்களது சகோதரிகளும் என் மீதும் கண்ணன், வாணி மற்றும் தமிழக அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரிதான். தாவா சொத்தில் வாதிகளாகிய நாங்கள் ஆக்கிரமிப்பு செய்திருப்பதாக குறிப்பிட்டு எங்களை காலி செய்யவேண்டும் என்று மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணம் நான் தாவா சொத்தில் சட்டப்படியான அனுபவத்தில் இருக்கிறேன் என்பதை காட்டக்கூடிய ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ6 முதல் 8 வரையிலான ஆவணங்கள் இந்த வழக்கிற்கு தேவையற்ற ஆவணங்கள் எனறால் சரியல்ல. வா.சா.ஆ.8 வீட்டுவரி ரசீதானது இந்த வழக்கு சொத்திற்கு

சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. எனது வழக்குப்படி இந்த வழக்கு சொத்தில் தனலெட்சுமிதான் அனுபவத்தில் இருக்கிறாரா என்றால் ஆமம்.